# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



தமிழ்நாடு அரசு
நகர் ஊரமைப்புத் துறை,சென்னை

ந.க.எண்.1149/2022 விருமா, நாள்.18.08.2022.

மனைப்பிரிவு ம.வ/ந.ஊ,து.இ.(விருமா) எண்.48/2022.

---

**மனைப்பிரிவு நிபந்தனைகள்**

1. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR-2019-ல் குறிப்பிட்டுள்ள Residential use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.

5. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப் பாதை / தந்திக் கம்பிப்பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

7. 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

/2/

தமிழ்நாடு அரசு
நகர் ஊரமைப்புத் துறை,சென்னை

ந.க.எண்.1149/2022 விருமா, நாள்.18.08.2022.

மனைப்பிரிவு ம.வ/ந.ஊ,து.இ.(விருமா) எண்.48/2022.

---

**மனைப்பிரிவு நிபந்தனைகள்**

1. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR-2019-ல் குறிப்பிட்டுள்ள Residential use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.

5. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப் பாதை / தந்திக் கம்பிப்பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

7. 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

/2/

(176)

## அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

| விபரம் | | பரப்பளவு விழுக்காடு |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | - | 0.64 ஏக்கர் (2591.00 ச.மீ.) |
| ஒதுக்கிய மனைகள் | - | 19 (1-19) |
| <u>பொது ஒதுக்கீடு</u><br>மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது. | | |
| பூங்கா | | TNCD&BR-2019 பிரிவு 47(6)-ன்படி மனைப்பிரிவில் 10% பூங்கா பரப்பிற்கு ஈடாக அரசு வழிகாட்டி மதிப்பின்படி உரிய கட்டணத்தினை மனுதாரர் செலுத்தியுள்ளார். |
| 2. உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் | - | 474.30 ச.மீ. (22.40%) |
| 3.உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு | - | 12.00 ச.மீ. (0.56%) |
| 4.தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது. | - | 12.00 ச.மீ. (0.56%) |
| <u>விற்பனைக்குரியவை</u><br><br>மனைஎண்கள்<br><br>கடை மனைகள் | -<br><br>- | |

22/8/2024

துணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
விருதுநகர் மாவட்டம்.

22/8/24

அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் பந்தல்குடி ஊராட்சி தலைவர் மற்றும் செயலர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : **G. பாலாஜி பத்ரிநாத்**

ந.க.05 /2022

நாள் : 06-09-2022

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு - அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் பந்தல்குடி ஊராட்சி வேலாயுதபுரம் கிராமம் சர்வே எண். 23/3பி2, ல் 0.64 ஏக்கர் (2591ச.மீ) மனைப்பிரிவு வரைபடம் ஒப்புதல் அளித்து உத்தரவு வழங்குதல் தொடர்பாக.

பார்வை :
1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், விருதுநகர். அவர்களின் கடிதம் ந.க.1149/2022 விருமா, நாள், 22.08.2022.
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், விருதுநகர் அவர்களின் மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு வரைபடம் ம.வ/ந.ஊ.து.இ.எண்-1149/2022.
3. ஊராட்சிக்கு எழுதிக்கொடுத்த பத்திரம் மற்றும் நிலப்பயன் மாற்றுக் கட்டணம்.
4. அரசாணை நிலை எண். 79 வீட்டுவசதி மற்றும நகர்புற வளர்ச்சித் துறை விதி எண். 3 மற்றும் 9

**ஆணை :**

பார்வை 1-ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், பந்தல்குடி ஊராட்சி, வேலாயுதபுரம் கிராமம் சர்வே எண் 23/3பி2, ல் 0.64 ஏக்கர் (2591 ச.மீ) ல் பரப்பில் அமையும் குடியிருப்பு மனை பிரிவிற்கு விதிமுறையின்படி அரசுக்கு ஒப்படைக்க வேண்டிய இடங்களை பந்தல்குடி சப்ரி எண். 2044/2022 நாள் 25.07.2022 ன்படி ஊராட்சித் பெயரில் தானமாக வழங்கப்பட்ட சாலைகள் மூலை முடுக்குகள் அனைத்தும் ஊராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது. மற்றும் பந்தல்குடி சப்ரி எண். 2045/2022 நாள் 25.07.2022 படி தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழக பெயருக்கு தான பத்திரம் மூலம் தானமாக வழங்கபட்டுள்ளது. மேலும் மொத்த நிலப் பரப்பான (2591ச.மீ) நிலப்பயன் மாற்றுக் கட்டணம் 1989-ம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1989 உட்கூறு AA பிரிவு 47ன் கீழ் சந்தை மதிப்பில் 3% தொகை ரூ.1,12,319/-ஐ Acct Code-021760800AS22709 என்ற அரசு கணக்கு தலைப்பில் E-Chellan மூலம் இணைய தளம் வாயிலாக 03-09-2022-ல் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் கூராய்வுக் கட்டணம் ரூ.1,000/- ஐ பந்தல்குடி ஊராட்சி பொதுநிதி கணக்கு தலைப்பில் 05.09.2022-ல் செலுத்தப்பட்டு ரசீது பெறப்பட்டுள்ளது. OSR கட்டணமாக 1,12,400 விருதுநகர் மாவட்டநகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது. அருப்புக்கோட்டை வட்டம், பந்தல்குடி ஊராட்சி வேலாயுதபுரம் கிராமம் சர்வே 23/3பி2, ல் 0.64 ஏக்கர் (2591 ச.மீ) அமையும் 19 குடியிருப்பு மனைகளுக்கு வரைபடத்துக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபட ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு ம.வ.ந.ஊ.து.இ.(விருமா) எண்.1149/2022 எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி எல்லை கற்கள் வரையறுக்கப்பட வேண்டும்.

2. நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும்

மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதல் இன்றி செய்தல் கூடாது.

3. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (சீர் சு) அமைக்கப்பட வேண்டும்.

4. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் வேறு காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தல் கூடாது. பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டும் பயன்படுத்த வேண்டும். அந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக நில அளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும்.

5. விரிவு அபிவிருத்தித் திட்டப் பகுதிக்குள் அமையும் மனைப்பிரிவு எனில் திட்ட விதிகளின்படி தனித்தொரு குடியிருப்பு மனையில் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். ஒரு பக்கம் இணைந்த வீடுகள் அனுமதிக்கப்பட்ட மனையில் ஒரு பக்கம் இணைந்த வீடுகளே கட்டப்பட வேண்டும். இதற்கு மாறாக எக்காலத்திலும் எந்தவகையிலும் எந்த மனையையும் பயன்படுத்தக் கூடாது.

6. ஊராட்சி கட்டிட விதிகளின்படி மனையின் எல்லைக்கும் கட்டிட வரம்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியில் தெருவில் உயர் மட்டத்திலிருந்து 1.8மீ (6அடி) மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகளின்படி 2.4மீ (8.0) உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்தவித கட்டிடமோ சுவரோ கட்டுதல் கூடாது.

7. மனையின் பக்க எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.5 அடி அளவுள்ள திறந்தவெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3 அடி திறந்தவெளி விடப்பட வேண்டும். 10மீ வரை மனையின் அகலம் உடைய மனைகளுக்கு பக்கத்திறவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.5 அடி விடப்பட வேண்டும்.

8. ஒவ்வொரு மனையின் பின்பக்கத் திறந்த வெளியில் கிணறு, கழிப்பறை, எருக்குழி மாட்டுத் தொழுவம், உந்துவண்டி நிறுத்தம், கொட்டகை போன்றவை போன்ற குடியிருப்பு அல்லது அதைச் சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அமைக்கப்படலாம். ஆனால் கட்டிடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையின் நீளத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் மனையின் பின்பக்கம் நிலமட்டத்திலிருந்து 3 அடி /3.75 அடி உயரத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

9. விரிவு அபிவிருத்திக்கு திட்டப் பகுதியில் அங்கீகார மனைப்பிரிவு எனில் திட்ட விதிகளின்படி மனையின் பரப்பில் 50 அல்லது 67 விழுக்காட்டிற்கு மேல் கட்டிடம் கட்டப்படக் கூடாது. கட்டிடம் விடப்படும் திறந்த வெளியினை தோட்டமாகவோ, திறந்த முற்றமாகவோ தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ துப்பரவாக பராமரித்தல் வேண்டும்.

10. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதி தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

11. கடைக்கால் (Foundation) போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ நிலச்சரிவை சரி செய்யவோ மனையிலிருந்து மண்தோண்டி எடுத்து பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்தவோ கூடாது.

12. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

13. கோவில், தேவாலயம், மசூதி ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம்/இடங்கள் வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்யப்பட வேண்டும். இவைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

14. பூங்கா, சிறுவர் விளையாடுமிடம் திறவிடம் போன்றவைகளுக்காக ஒதுக்கப்பட்ட மனைகளை வட்டாட்சியர் அலுவலத்தில் உட்பிரிவு செய்து உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்க வேண்டும்.

15. மனையின் குறுக்கே குறைந்த அழுத்த/உயர் அழுத்த மின் கம்பிப்பாதை/தந்திக்கம்பி பாதை அமைந்தால் கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றியமைக்க வேண்டும்.

16. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் தொழில் நுட்ப ஒப்புதல்.

அ) (Technical Approval) மட்டுமே வழங்கப்பட்டு உள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் மனையின் உரிமையாளரே அதற்கு முழு பொறுப்பேற்க வேண்டும்.

ஆ) தமிழ்நாடு நகர்ப்புற நில உச்ச வரம்புச் சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைத்தால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விவரத்தினை தொடர்புடைய உச்ச வரம்பு சட்ட அதிகாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

17. மனுதாரர் தலைவர் பந்தல்குடி /வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அருப்புக்கோட்டை ஒன்றியம் அவர்களிடம் வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மானம் எண்ணும் நாளும் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும் எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

18. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில், நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்பட.க் கூடிய சூழல்நிலை ஏற்படின் மனைப்பிரிவுகள் வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.

19. மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கிய பின்போ, மனைகளை விற்ற பின்போ அல்லது தாவா ஏதேனு ஏற்படின் அதற்கு இவ்வுத்தரவு பொருந்தாது. மேலும் நீதிமன்ற வழக்கிற்கும் இவ்வுத்தரவு பொருந்தாது.

20. இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொது மக்கள் பார்வைக்கு சம்பந்தப்பட்ட இடத்தில் 5அடிX4அடி என்ற அளவுக்கு குறையாமல் கான்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.

21. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் மனைப்பிரிவு வரைபடம் நகல் வழங்கப்பட வேண்டும்.

இப்படிக்கு

06/09/22

தலைவர்
பந்தல்குடி ஊராட்சி
அருப்புக்கோட்டை ஒன்றியம்

நகல்:

1. மனுதாரர்
திரு. T. கோகுலகண்ணன் (பொது அதிகார முகவர்),
2075 கஞ்சநாயக்கன்பட்டி
அருப்புக்கோட்டை.

2. துணை இயக்குநர் அவர்கள்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கதவு எண். B70,
தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மனைப்பிரிவு,
மதுரை சாலை சத்திரரெட்டியபட்டி
விருதுநகர் மாவட்டம் - 626 001

3. திரு.சர்பதிவாளர்,
பந்தல்குடி சர்பதிவாளர் அலுவலகம்
பந்தல்குடி.

4. திரு.உதவிமின் பொறியாளர்
தமிழ்நாடு மின்சார வாரியம்,
பந்தல்குடி.

# our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate